
0856

# இது ஒரு ஜனனம்

M.M.M. NOORUL HAGU
EDITOR OF AL HUTHA
129, OSMAN ROAD
SAINTHAMARARUTHU - 1

0856

Noorulhagu



SUNDAY OBSERVER, AUGUST 12, 1990

'HATHIBUL HUTHA'
M.M.M. NOORULHAGU J.P
DIPLOMA IN MASS MEDIA
FREELANCE JOURNALIST & WRITER
129B, OSMAN ROAD,
SAINTHAMARUTHU - 05

# 'Black Friday' massacre

92, Beach Road
Kattankudy.
0856.

# இது ஒரு ஜனனம்

தியாக நிகழ்வுகள் பல இடம் பெற்ற
முஹர்ரம் பத்தாம் நாளின் நினைவாக -

இஸ்லாமிய கலாச்சார கல்வி நிலையம்.
மெயின் வீதி, காத்தான்குடி.







## COMMENT

### Save the Muslims

Muslims are under attack for no fault of th[eir]... They are under attack in Sri Lanka. They a[re under] attack in India. Their attackers seem to thin[k it is] a crime to be a Muslim. In India Hindu fun[damental]ism has reached its fanatical heights. In ... political fanaticism of Tamil separatist... its lowest depths.

Mr. Lal Krishna Advani, the Pr[esident of the] Baharatiya Janata Party, plunged ... vortex of communal frenzy when ... *rath yatra* (chariot journey) to Ay[odhya to] destroy the Muslim mosque an[d build a] temple for Ram – the supreme ... pantheon. Of course, Mr. Adv... that Ram had surviv... as a ... Temple in Ayodhy... also ... Ayodhaya. Ra... shrine of an... worshipp... *yatra* ... but ...



Daily News

P.O. Box 1217
35, D.R. Wijewardene Mawatha, Colombo.
Telephone: 421181 (10 Lines)
Telegrams: NEWS Colombo
Cables: TANOC Colombo
Telex: 22262 ANCL CE

MONDAY, AUGUST 6, 1990

# Another massacre of Muslims

[It i]s a melancholy task to return within ... to a subject we had dealt with ... last Friday. The title of ... [un]der attack", is self- ... was written, ... Muslim ...

## OPINION

# Killings of Lankan Moslems senseless

KILLING appears to be easy enough in today's ruthless world; we are, through a barrage of stories fed on a daily diet of news on senseless killings, almost immunized to the point of being spiritually numbed and begin to think of this as just another phenomenon. What is the point of it all? Political killings, ethnic and religious killings, psychopathic killings et al seem the inexhaustible order of the day.

From little Sri Lanka we heard on Sunday of the cold-blooded killings of nearly 140 *Moslems* who were slaughtered by Tamil Tiger *rebels* as they were praying in two mosques in *the* thickly Moslem-populated Eastern Batticoloa district. Not satisfied with this blood-*letting* the same group allegedly have shot to *death* yet another 17 unarmed civilian Moslems. *What* do these rebels hope to gain? Little, no *doubt*, if they believe that this will [all]ow the *Moslems* into acquiescence to live in a sepa-

## கனடா அதிர்ச்சி!

ஒட்டாவா, ஆக. 4

காத்தான்குடியில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டது குறித்து கனடிய வெளி விவகார அமைச்சர் திரு. ஜோ கிளார்க் அதிர்ச்சியும் பீதியும் தெரிவித்தார்.

"அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் ஜூன் மாத மத்தியில் முடிவடைந்ததையடுத்து எல். ரி. ரி. ஈ.யினரால் மேற்கொள்ளப்பட் வரும் கொலைகள், வன்செயல், அழிவு நடவடிக் ... எந்த வகையிலும் நியாயப்படுத்த ... ஆயுதங்களைப் பயன்படுத்துவதன் ... பிரச்சினைக்குத் தீர்வு காண ... திரு. கிளார்க் குறிப்பிட்டார்.

## இலங்கையில் முஸ்லிம்களுக்காக முதலில் குரல் எழுப்பிய ஈரான்!

தமிழீழ விடுதலைப்புலிகளின் இரத்த வெறியிலிருந்து முஸ்லிம்களைப் பாதுகாக்குமாறு ஈரான் அரசு உத்தியோக பூர்வ முறையில் இலங்கை அரசைக் கோரியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பற்ற அப்பாவி முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்து ஈரான் இஸ்லாமியக் குடியரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஈரான் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள செய்தியில் இலங்கையில் நடைபெறும் வன்செயல்கள். அப்பாவி மக்களின் கொலைகள் ஆகியவை பற்றிய விசனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் வன்செயல்களைத் தடுக்கவும் குற்றச் செயல்களிலிருந்து இலங்கை முஸ்லிம்களின் உயிர். உடைமைகளைப் பாதுகாக்கவும் முடியுமான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை ஈரான் அரசு கேட்டுள்ளது.

தோட்டத் தொழில் துறை அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு.ரஞ்சன் விஜேரத்ன தலைமையில் தூதுக்குழு ஒன்று ஈரான் சென்றபோது ஜனாதிபதி ரப்ஸன்ஜானி இலங்கை நிலைமையை அறிவதில் அதிக கரிசனை காட்டியுள்ளார்.

அமைச்சர் திரு. ரஞ்சனை பல தடவைகள் அவர் சந்தித்துப் பேசியுள்ளார்.

இலங்கை முஸ்லிம்களின் நிலை பற்றிய செய்திகளை ஈரானிய பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்தும் பிரசுரித்துள்ளன.

# விடியலின் விலாசங்கள்!

— ———————மதியன்பன் மஜீத்

அந்த இரவின்
இரத்த வாடை
இன்னுமெங்கள்
சுவாசத்தோடு
சுழன்று கொண்டிருக்கிறது!

★

முசல்லாவின் முதுகில்
முகம் புதைத்த
மூமீன்களை
முதுகுக்குப் பின்
முட்டாள்தனமாக
சுட்டுத்தள்ளியது
வீரத்தின் விளக்கமல்ல
இயலாமையின் இலக்கணம்!

★

நாங்கள்-
பெயரில் மட்டுமல்ல
செயலிலும்-
மிருகங்கள்தான் என்பதை
வீபூசர்கள்-
விளக்கி விட்டார்கள்!

★

இவர்களின்-
ஈனத்தனமான
ஈழப்போராட்டத்திற்கு
இந்த-
ஈரக் குழந்தைகள்
என்ன செய்தன?

★

இது-
மையித்து சீசன்
துப்பாக்கிரவைகளால்
முஸ்லிம்கள் தினமும்
தீக்குளிக்கிறார்கள்!

எங்களுக்கு-
தினந்தோறும்
ஆறு நேரத் தொழுகை
அவசியமாகிவிட்டது.
மையித்துக்கள்-
மலிந்துவிட்டதனால்

அந்த இரவு-
ஒரு-
சகாப்பத்தையே சரித்துவிட்டுச் சென்றது
குர்ஆனோடு-
இவர்களின் குருதிகள்
கூட்டுச் சேர்ந்தன......

★

குறூப்ரத்தம் பாராமல் குருதிக் கடலை
பள்ளியினுள் பார்க்க முடிந்தது
ஷுஹதாக்களே!
உங்களுக்காக இன்னும்
எத்தனை ஊர்கள் இத்தா இருக்கின்றன'

★

நீங்கள்:
சஹீதான சம்பவம் கேட்டு
கலங்காத கல்புகளே கிடையாது
கறுப்பு இதயங்களும் கலங்கி நின்றன....!

★

மக்களின் கண்ணீரே
கரைபுரண்டபோது
உங்களைத் தண்ணீரால் குளிப்பாட்டியது
எங்களின் தவறுதானா!

★

நீங்கள் இறந்தவர்களல்லர்!
எங்களை விட்டு மறைந்தவர்கள்....
அதனால்தான் இன்னுமெங்கள்
இதயங்களுக்குள் இளைப்பாறுகிறீர்கள்!

★

இறக்கும்போதே இறைவனை நினைத்தவர்களை
சஹாபாக்கள் காலத்தில்
சந்தித்ததாக சரித்திரம்
அதனை நாங்களும் பார்க்க முடிந்தது
உங்கள் மூலமாக!
கோழைக் கூட்டமே'
வீரர் அலியின் பரம்பரையில் அவதரித்த
முஸ்லிம்கள் வீரர்கள் என்பதை
விளக்கும் நாள் இன்னும்
வெகுதூரத்தில் இல்லை!

★





## Tigers kill two Muslims

...unal clash so as...

## 6 KILLED AS TIGERS FIRE AT MOSQUE

Six p... homes... Satur... terro... hou...

The terrorists had also moved four guns issued to ... who had been ... mosque ... robbed the ...

## Tigers kill 14 Muslim farmers

Nineteen Muslims described by the police as marrs were brutally killed by the LTTE at Praipattu in the Eastern Province on Monday. 40 Police confirmed. ... had been ... me of them had been shot dead whil...

## Forty Muslims massacred

by Suresh Mohamed ... Ampara road "Tig...

At least 40 Muslims have b... to death in three separate a... LTTE cadres in the interior of ... Sunday evening. The number ... security officials said, could be ... actual count had not been possi... difficulties and the lack of ...

In the first attack which to... p.m. on Sunday, 'Tigers' shot a... 18 Muslim farmers at Palamuk... the Attalachenai area. The men ...ome from their fields when ... tied their hands be... throgh their he... victims w...

## Death toll rises to 50

From Sena Wara-sahenneddi in Akkaraipattu

The latest death toll in Sunday night's massacres ... Akkaraipattu has risen to 50. Seven-te... had been killed in Palamunai (Oluvil). In three different locations on the Ampara-Akkaraipattu trunkway ... 15 and 13 Muslim ... been killed ...tively, STF ...said.

...ire was heard ... several directions ... STF troops moved ...at in groups from their ...camps to counter the LTTE violence. Upto eight Tigers have been killed in separate confrontations by the STF. Tiger cadres in small groups were believed to be making their way towards Akkaraipattu the sources said.

Two Muslims seriously injured in Sunday night's massacre have been warded at the Ampara hospital. They were identified as A. L. Samsudeen and M. Rasool.

**Flash**

A late Reuter report put the death toll in the latest massacre at 58.

## Tight security fr...

Arrangements are afoot to move 300 Haj pilgrims returning from Mecca to Kattankudy under tight security arrangements.

## Tigers kill 51 Muslims, lose 13 men

From C. W. Ranaweera, Athula Priyankara ...

## 140 Muslims die in LTTE carnage

...death-toll from Friday's massacres at the ...ques at Kattankudy ...en to at least 140 ... yesterday with mo... ...d among those ... lying seriousl... ...orts reach... Colom... were ... but

On Saturday, 116 bodies of the hapless vic... this bloody massacre were laid to rest in a co... grave amidst mourners who were dumbstru... grief.

They were joined by a special presidentia... tion to the funeral rites, which comprised M... Trade and Shipping A. R. Munsoor, State M... Foreign Affairs John Ameratunga, State M... ...slim Religious and Cult...

## 158 of the 168 abducted Muslims killed - Six Muslims abducted

by Franklin Raviraj

Eastern ... week ha... abducted ... SLMC T... Farook ... Six Muslims ... unknown persons ... Udumbugala in Siyam... balagaswewa. ... wachchi...

...ed cam-... Asirithgama bazaar. One of the abducted men had escaped with serious knife injuries. He ha...

## Tigers massacre 168 Muslims

COLOMBO, July 14 (AFP) - Tamil guerrillas were beli... massacred 168 Moslems returning from the ... Eastern Sri Lanka, a Moslem ...

...from the Moslem Congress, M. L. A. M. Hi... ...p the matter with Justice Minister Shahul H... ...Hameed later told him that the Army Chief ... in the area to search for the missing people ...bullah said the LTTE was responsible for th... citizens' committee in Kathankudy, five k... of Batticaloa, the town from where th... ...mittee has also said that their attempts to ... in the area had not succeeded. (Cont)

## Muslims fall prey to 'Tigers'

By Shamindra Ferdinando and Franklin Raviraj

...ty five Muslim ...

...dent Premadasa, Army Commander Lt. General Hamilton Wanasinghe and International Re... ...lations Advisor to the ...

and driven ... an unk... tion, ...

THE ISL...

## LTTE killed over 250 Muslim civilians

The Sri Lanka Muslim Congress said ... with the... communique ... Gene...







நீங்கள் ''ஷஹீது''கள்
காபிர்கள் தங்களை
கோழையாய் நிரூபித்த
புனித ஆத்மாக்கள்!

ஏ...!
உங்களாசைகள்
எண்ணங்கள்
ஏன்
வாலிபம் கூட
வாழ்வின் ஆரம்பத்தில்

இந்நிலையில்
உம்மைப் பலிகொண்டனர்
அபூஜஹிலின் வாரிசுகள்
ஓ...
அபூஜஹிலால் கூட
புரிய முடியாத
சித்திரவதைகள் ...

தலையைத் தடவி
முதுகில் குத்திய
நயவஞ்சகப் பேய்கள்
புரிந்தது
கொலை மட்டுமா
கொடுமையுமல்லவா!

நினைக்கையில்
இன்னும் தான்
எம்மிதயங்கள்
துடிக்கின்றன.

ஓ...
நீங்கள்
பிர்தௌஸின் மாளிகையில்
உறங்குகின்றீர்
நாங்கள்
பிரிந்த வேதனையில்
கதறுகின்றோம்.

தோழர்களே!
பாதகர்கள்
அழிக்கப்படுவர்
வீணர்கள்
வீழ்த்தப்படுவர்.

அன்பர்களே!
''இன்னல்லாஹா
மஅஸ்ஸாபிரீன்''
இத்திருவசனத்தின்
போதனை மட்டும்
இல்லையென்றால்
அன்று -
பல ''பத்ரு''கள் மூண்டிருக்கும்

ஓ...
பொறுமைக்கும்
எல்லையுண்டு.

மருதூர் ஜமால்தீன்

# ஒரேபார்வையில்...

## ஏறாவூர்

ஏறாவூரில் ஆறு உறுப்பினர்கள் வீதம் மரணித்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 4

மூன்று குடும்பங்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் 4 பேர் வீதம் கொல்லப்பட்டனர்.
ஒரு குடும்பத்தில் தாயும் தந்தையும் கொல்லப்பட்டு 14 மாத வயதுள்ள பெண்குழந்தைமட்டும் காயங்களுடன் தப்பியது.

ஒரு குடும்பத்தில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

11வயதுச்சிறுவன் உடலில் 23 துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்திருந்தன.

மொத்தமாக மரணித்த 116பேரும் 74 குடும்பங்களைச் சேர்ந்தோராவர்.

30 பெண்கள் விதவைகளாகியுள்ளனர்.
200பேர் அனாதைகளாகியுள்ளனர்.
ஏழே ஏழுநாள் வயதுள்ள ஒரு பச்சிளம் குழந்தையும் கொலையுண்டது.

### தொழில் ரீதியில் ஷஹீதானோர்

| | |
|---|---|
| மௌலவி+ஹாபிழ் | 03 |
| முஅத்தினார் | 01 |
| ஆசிரியர்கள் | 09 |
| மாணவர்கள் | 29 |
| சிப்பந்திகள் | 06 |
| சாரதிகள் | 11 |
| நடாத்துனர்கள | 05 |
| மில் ைறவர் | 01 |
| வைத்தியர் | 01 |
| மின் தொழிலாளி | 01 |
| தையற்காரர் | 01 |
| வியாபாரிகள் | 73 |
| அங்காடி வியாபாரிகள் | 09 |
| தொழிலாளி | 01 |
| மீன்பிடித் தொழிலாளி | 01 |
| கூலித் தொழிலாளிகள் | 13 |
| தொழிலற்றவர் | 01 |
| காரியாலயச் சேவகன் | — |
| காவலாளி | 01 |
| நெசவுத் | 01 |

## காத்தான்குடி

### வயது அடிப்படையில் புள்ளி விபரங்கள்

| வயது | தொகை |
|---|---|
| 6-10 | 06 பேர் |
| 11-15 | 17 பேர் |
| 16-20 | 17 பேர் |
| 21-25 | 36 பேர் |
| 26-30 | 22 பேர் |
| 31-35 | 26 பேர் |
| 36-40 | 18 பேர் |
| 41-45 | 10 பேர் |
| 46-50 | 12 பேர் |
| 51-55 | 03 பேர் |
| 56-60 | 06 பேர் |
| 61-65 | 04 பேர் |
| 66-70 | 02 பேர் |

### ஷஹீதானோரின் பிள்ளைகளின் விபரம் வயது அடிப்படையில்

| வயது | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 0-5 | 44 | 21 | 65 |
| 6-10 | 14 | 23 | 42 |
| 11-15 | 18 | 21 | 39 |
| 16-20 | 19 | 15 | 34 |
| 21-25 | 09 | 05 | 14 |
| 26-30 | 08 | 00 | 08 |
| | 112 | 90 | 202 |

கடத்தப்பட்டு ஷஹீதானோர் – 68+10
மீரா ஜும்ஆ மஸ்ஜிதில் ஷஹீதானோர் – 75
ஹுஸைனியா தைக்காவில் ஷஹீதானோர் – 26

# ஓ... புறாத்...

ஓ ..... புறாத் ........
இன்னுமே நீ பாய்ந்து கொண்டிருக்கிறாய்.....
உன்னைக் கண்டதுமே
உள்ளத்தில் தோன்றும் அந்த உணர்ச்சிகள்....

உந்தன் நீரை நாய் குடித்தது.....
பேய் குடித்தது.....
நஸாராக்கள், யஹூதீகள் குடித்தனர்.

உந்தன் நீரை அருந்தச் சென்று
அண்ணலின் குடும்பமே அடிப்பட்டது.

ஓ......... புறாத் ...........
இன்னுமே நீ பாய்ந்து கொண்டிருக்கின்றாய்.
அன்றே நீ காய்ந்திருக்க வேண்டாமா?
அப்போதே எங்கள் எண்ணங்கள் மாய்ந்திருக்குமே....
உன்னைக் காண்கையில் எங்கள்
உள்ளங்களில் உதிரமல்லவா பாய்கின்றது.

இமாமின் கையில் இருந்த குழந்தை
இரக்கமிலா வம்பனின் அம்பினால் இரத்தம் தோய்ந்ததும்.....
இமாமின் கைகள் குருதியை வாரி இறைத்ததும்..........
இன்னுமொரு புறாத் அங்கு உருவானதே..........

ஓ....... புறாத் ..........
இன்னுமே நீ பாய்ந்து கொண்டிருக்கின்றாய்.

அன்றே நீ கொடியவரை மூழ்கடித்திருக்க வேண்டும்
அப்போதே எங்கள் கடமை முடிந்திருக்கும்
இன்றுவரை நாங்கள் யஸீதுகளைத் தேடி
அலை மோத வேண்டியதில்லை.

எங்கள் இனிய தலைவரின் இனிய பேரர்கள் -
எங்களைச் சொர்க்கத்தின் அணிசேர்க்கும் தீரர்கள்.
மங்காப் புகழ் கொண்ட கர்பலா மண்ணின்
வீர மைந்தர்கள்.....

அன்று உன் நீரை அருந்திட அனுமதி இல்லை.
அண்ணலின் பேரர்கள் அருந்த முடியாத்
தண்ணீரைக் கொண்டு வரும் புறாத்தே!

என்றோ ஓர் நாள்
இந்த எதிரிகள் நாவரண்டு
தண்ணீருக்காய் ஓலமிட்டோடும்
அந்த நாள் வராமலா போகும்....?

இன்னும் நீ பாய்ந்து கொண்டிருக்கின்றாய்.......
என்றுமே கர்பலாவின் காட்சியாய்
இன்னுமே நீ பாய்ந்து கொண்டிருக்கிறாய்.....

அபூ நஜாத்



# ஜனனம்

இது முஹர்ரம் மாதம்... இஸ்லாமிய வரலாற்றின் திருப்பு முனைகள் பல இடம் பெற்ற புண்ணிய மாதம், கண்ணியம் நிரம்பிய மாதம். அம்மட்டுமன்றி கண்ணீர் சொரியும், கதறியழும் சம்பவங்கள் பல இடம் பெற்ற மாதம்.

முஹர்ரம் பத்தாம் நாள்... இவ்வருடமும் வந்து விட்டது. சென்ற வருடமும் தான் வந்தது.... அதற்கு முந்திய....... அதற்கு முந்திய....... 1400 வருடங்களாக வந்து கொண்டிருக்கின்றது.

''ஒவ்வொரு கர்பலாவிலும் இஸ்லாம் புத்துயிர் பெறுகின்றது'' என்ற நல்லோரின் வாக்கை நிறைவேற்றுகின்றோமா? அது தான் உள்ள ஒரேயொரு வினா. சரித்திரமும், சந்ததிகளும் பதிலளிக்க வேண்டிய ஒரே வினா.

அண்ணல் நபிகளாரின் அருமைப்பேரர் - அலி எனும் புலியின், பாத்திமா எனும் புண்ணியவதியின் அன்பு மகன், இமாம் ஹசனின் இன்னுயிர்ச் சோதரர்...... எங்களின் நல்லவர்களை இம்மையில் தலைமை தாங்கும் அந்த புண்ணிய குடும்பத்தின் ஓர் அங்கம்

கொடிய யசீதின் ஆணைக் கிணங்க, கொடு வாளினால் தலை கொய்யப்பட்ட அந்த இமாம் இந்த நாளில்தான் கர்பலா மண்ணில் சாய்ந்தார். மாய்ந்து விடவில்லை. அவரை மரணம் அன்று தழுவவில்லை. மாறாக அந்தவீரத் தியாகி அன்று தான் ஜனனம் கொண்டார்.

கர்பலாவில் நடந்தது மரணமல்ல. ஜனனம். அஸ்தனமல்ல உதயம். மாலை அல்ல விடியல். மரணித்தது ஹுசைன்களல்ல,யசீதுகள்தான். அதனால்தான் அன்று இஸ்லாம் புத்துயிர் பெறுகிறன்றது.

இது ஒரு வட்டம். இந்த வட்டத்தின் தொடக்கப் புள்ளியே அதன் முடிவுப் புள்ளி. அதன் முடிவுப் புள்ளியே அதன் தொடக்கப் புள்ளி. அதனால் ஒரு ஹுசைன்மறைந்தார். ஒரு கோடி ஹுசைன்கள் தோன்றினர். அருமைத் தோழர் 72 பேர் மறைந்தனர். 72 கோடிப்பேர் தோன்றினர்.

யசீதுனுடையது ஒரு நேர்கோடு. அதன் தொடக்கப் புள்ளி தொடக்கப் புள்ளியேதான். அதன் முடிவுப் புள்ளி முடிவுப் புள்ளியேதான். இங்கே ஜனனம் ஒரு முறையே! மரணமும் தான்.

இதற்கேது சாட்சி, வரலாறே சாட்சி. 600 கோடிப் பேரில் ஒரு யஸீது கிடையாது. ஒரு யஸீதின் மகன் கிடையாது. பேரன் கிடையாது.

ஹுசைனின்...... ஒரேயொரு ஆண் மகன் ஜெய்னுல் ஆப்தீன் மூலம்..... கோடி கோடியாய் ஹுசைன்கள். உலகின் ஒவ்வொரு கோடியிலும் ஹுசைன்கள்.

யசீதோ.... கோடி சொத்துடன், அரசாட்சியுடன் ........... படைபலத்துடன் பெற்றது என்ன. சாபம் தான். உலகின் ஒவ்வொரு கோடியிலும் கொடியவர்க் கெதிராய்ப் போர்க்கொடிகள். கர்பலாவில் இமாம் ஹுசைன் நட்ட அந்தக் கொடி இன்றும் இங்கும் - என்றும் எங்கும் உயரப் பறக்கும் காட்சியைப் பார்.

எனவே.. அதனை நாம் மரணம் என்று கூற மாட்டோம். எண்ணவும் மாட்டோம். ஆனதால் காத்தான் குடியில் ஹுசைனியாப் பள்ளியில், மீராப் பள்ளியில் தொழுது கொண்டோரை முதுகின் பின்னால் ஈனர்கள் சுட்டார்கள் என்பதால் இதனையும் மரணம் என நாம் கூறமாட்டோம். எண்ணவும் மாட்டோம். ஏறாவூரில் துயிலில் படுத்துறங்கிய மக்களை எழுப்பி வெட்டிக் கொன்றார்கள் என்றால் அங்கேயும் நாம் மரணம் என்று மட்டும் ஒப்பாரி வைக்க மாட்டோம்.

பாலமுனையில், அக்கரைப்பற்றில் வயலில் வேலை செய்த பாட்டாளிகளைக் கொன்று குவித்தார்கள் என்றால் நாம் மூலையில் ஒதுங்கி விட மாட்டோம்.

ஏன்....:? இது வட்டம்! முடிவே ஆரம்பம். ஆரம்பமே முடிவு.

எங்கிருந்து வந்தோமோ அங்கு செல்கின்றோம். அவ்வளவுதான். முடியாது இந்த வாழ்வு. முடிந்து போவது ஈனர்களின் வாழ்வே! ஏன்...... ஏன்.....?

காணும் இடமெல்லாம் கர்பலா
பேணும் மாதமெலாம் முஹர்ரம்

அதனால் இன்றும் ஒரு கர்பலாவை, இன்னும் ஒரு கர்பலாவை இரு கை நீட்டி வரவேற்போமேயன்றி ஓடி ஒழியப் போவதில்லை நாம். பேடிகள் அல்ல நாம் பதுங்கியிருந்து முதுகில் சுட. பச்சிளம் பாலகர்களை பதறப் பதறக் குத்திக் குதற நாம் பிணம் தின்னும் கழுகுகளா என்ன? கண்டதையெல்லாம் அறுத்துக் குவித்திட நாம் வளைகளில் ஒதுங்கும் எலிகளா என்ன?

எனவே! சோதரீர்.... அன்றும் கர்பலா!
இன்றும் கர்பலா! என்றுமே கர்பலா!
என்ற அந்த மந்திரத்தை நீவீர் மறந்து விடாதிருப்பீர். ஒன்று படுவோம்!

இங்கு மரணமே கிடையாது என்றும் ஜனனமே!

## எதிர்காலத் திட்டங்கள்

இஸ்லாமிய நூலகம்.
இஸ்லாமிய ஒலிப்பதிவு- ஒளிப்பதிவு நாடா நிலையம்.
வெளியீட்டுப் பணியகம்.
இஸ்லாமிய பாலர் பாடசாலை.

தொடர்ந்தும் உங்கள் ஆதரவை நாடி நிற்கின்றோம்.

**இஸ்லாமிய கலாச்சார கல்வி நிலையம்.**
**மெயின் வீதி, காத்தான்குடி.**